**தலைப்பு 171 – மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 171 – மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

#### 2.1.1 நிதியேற்பாட்டின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் அமைச்சினால் இரு செலவின விடயங்களுக்காக குறை நிரப்பு மதிப்பீட்டின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 49,501,000 தொகையான நிதி ஏற்பாடுகளில் இருந்து ரூபா 30,767,473 தொகையானது குறித்த பணிக்கு ஈடுபடுத்தப்படாது எஞ்சியிருந்ததுடன் அது 58 சதவீதம் முதல் நூறு சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | காலம் போதுமானதாக இல்லாத இருந்தமை, நிகழ்ச்சி திட்டங்களை மாற்றம் செய்வதற்கு நேர்ந்தமை ஆகியவற்றின் அடிப்படையில் நிதியேற்பாடு எஞ்சியிருந்தமை. | சரியான மதிப்பீடுகளை தயாரித்து குறித்த பணிகளுக்காக தாமதம் இன்றி ஈடுபடுத்த வேண்டும். |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 5 செலவின விடயங்களுக்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டு இருந்த ரூபா 23,915,000 தொகையான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதிப்பிரமாணம் 66 இன் கீழான மாற்றல்களின் மூலம் 7 செலவின விடயங்களின் நிதியேற்பாட்டின் மொத்தமும் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | செலவினங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை, நிதி கிடைப்பதிலான தாமதங்கள், கிடைக்காத செலவின விடயங்களுக்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டமை சிக்கனமாக, பயன்படுத்தல் மற்றும் உரிய காலப்பகுதியினுள் தேவை ஏற்படாமை போன்ற காரணங்களால் நிதி ஏற்பாடு எஞ்சியுள்ளமை. | நிதிப்பிரமாணம் பின்பற்றப்பட்டு முறையான எதிர்வுகூறலுடன் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அமைச்சின் வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு மூலதன மானியங்களாக வழங்கப்பட்டிருந்த ரூபா 35,145,000 தொகையில் ரூபா 34,447,244 தொகை அதிகாரசபையினால் மீண்டு எழும் செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் மூலதன செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டினை தயாரிக்கும் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் செலவுகளை உரிய முறையில் வேறுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதி பிரமாணங்களின் பிரகாரம் வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் கீழ் மூலதன நிதியேற்பாடுகள் மீண்டெழும் செலவினங்களுக்காக செலவு செய்ய முடியாது என அதிகார சபைக்கு அறிவிக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மூன்று மரணம் அடைந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து மற்றும் ஏழு ஓய்வு பெற்று சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து முறையே ரூபா 455,330 மற்றும் ரூபா 1,731,541 எனுமாறு மீளாய்வாண்டில் சேவையிலிருந்து விலகிச் சென்ற ஐந்து உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 611,006 எனுமாறு ரூபா 2,797,877 கூட்டுத் தொகையான கடன் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | கடன் மீதிகளை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 உத்தேச நலன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிராமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கையின் சிறுவர் பகல் நேர பராமரிப்பு வசதிகளுக்கான தேசிய கொள்கை ஒன்றினை உருவாக்குதல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிலையங்களில் | 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட முன்மொழிவுகளை உள்ளடக்கிய கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டவாறு | சிறுவர் பகல் நேர பராமரிப்பு நிலைய வசதிகளுக்கான தேசிய கொள்கை ஒன்றினை தயாரித்து |

| | | | |
|---|---|---|---|
| | கண்காணிப்பு அமைச்சின் பிரதான பணி ஒன்றான போதிலும் மீளாய்வாண்டில் இலங்கையின் சிறுவர் பராமரிப்பு வசதிகளுக்கான தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளமை. | நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான 59 வனிதா சக்தி நுண் நிதி கிளைகளின் ரூபா 49,071,128 தொகை காணப்படும் 29 நிலையங்கள் செயலிழந்து காணப்படுவதுடன் 07 கிளைகளின் கணக்குகளின் மீதிகள் தொடர்பான தகவல்கள் பணியகத்திடம் காணப்படவில்லை. | 29 செயலிழந்த கிளைகளை கலைப்பதற்கு உரிய அனைத்து தகவல்களும் சேகரிக்கப்பட்டுள்ளது. | செயலிழந்த கிளைகளை செயற்படு நிலைக்கு கொண்டுவர அல்லது அவற்றினை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வனிதா சக்தி நுண் நிதி கிளைகளுக்காக அமைச்சினார் மேற்கொள்ளப்பட்ட மூலதன மற்றும் நிர்வாக செலவினங்களுக்காக முறையை ரூபா 1,600,000 மற்றும் ரூபா 2,101,156 எனுமாறு ரூபா 3,701,156 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், தற்போது அந்த கிளைகளின் நிர்வாகம், கணக்கு வைத்தல் கடன் வழங்குதல் மற்றும் கடனை அளவீடு செய்தல் ஆகியவற்றை சுழற்ச்சியாக மேற்கொள்ளவில்லை என்பது கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது. | 11 கிளைகள் மாத்திரம் செயற்படு நிலையில் காணப்படுவதாக அறிக்கை இடப்பட்டுள்ளதுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக நாளதுவரையாக்கப்பட்ட கணக்கு தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு மற்றும் பொருத்தமான கணக்காய்வினை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளன. | நாளதுவரையாக்கப்பட்ட கணக்கின் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | தொழில் முயற்சிகளில் ஈடுபடும் பெண்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதாரத்தை கட்டி எழுப்பும் நோக்குடன் ரூபா 4,458,063 கிரயத்தில் Lanka Women E-market எனும் வலைத்தளம் 2022 மார்ச் 08 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டிருந்தது. இந்த வலைத்தளத்தினை திறந்து வைத்து 2 வருட காலம் கடந்திருந்த போதிலும் | 2023 ஆம் ஆண்டு முதல் கிரமமாக தொழில் முயற்சிகளில் ஈடுபடும் பெண்கள் இதில் பதிவு செய்வதற்காக மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டது என்பது. | உரிய வசதிகளை வழங்குவதன் மூலம் வலை தளத்தினை நிர்மாணித்த நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்ப உதவி கிடைக்காமல் மற்றும் கட்டமைப்பினை செயல்படுத்துதல் தொடர்பில் போதிய பொறுப்பு அமைச்சின் உரிய பிரிவுகளினால் வழங்கப்படாத காரணத்தால் டிஜிட்டல் விற்பனை தளமானது தோல்வியடைந்த காரணத்தால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் விளைவற்றதாக காணப்பட்டது. | | |
| (உ) | அமைச்சின் கீழ் காணப்படும் பிரிவு ஒன்றான கிராம அபிவிருத்தி பயலுனர் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி 16 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகள் என ரூபா 8,000,000 செலுத்தப்பட்டிருந்தது. | கிராமிய அபிவிருத்தி பயலுனர் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் பதவியணியை திருத்துவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுப்பப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை உரிய உத்தியோகத்தர்களை மாத்திரம் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2017 மார்ச் 29 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வறுமை ஒழிப்பினை மேற்கொள்வதற்காக நிறுவப்பட்ட 3618 இராம சக்தி சங்கங்கள் 2067 சங்கங்கள் அதாவது 57 சதவீதமானவை செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் அந்த சங்கங்களின் நிதி கணக்குகளில் ரூபா 635,705,116 தொகை விளைவற்று காணப்பட்டது. | பதிவு செய்யப்பட்ட மொத்த சங்கங்களின் எண்ணிக்கை 3696 ஆகும். அவற்றின் செயற்படு நிலையை உறுதிப்படுத்துவதற்கு கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதுடன், செயலிழந்த சங்கங்களில் இருந்து செயற்பாட்டில் உள்ள சங்கங்களுக்கு அரசு நிதியை மாற்றுவதற்கு உரிய பணிகள் மாவட்ட மற்றும் பிராந்திய மட்டத்தில் இடம்பெற்றவாறு உள்ளது. | நுண் நிதி கணக்குகளில் வாய்ப்பு பணத்தை உரிய நோக்கங்களுக்காக செலவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2017 நவம்பர் 06 ஆம் திகதிய சார்க் அபிவிருத்தி நிதியத்தின் பிரதான உடன்படிக்கையின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு கட்டணம் இன்றி உபசரனை சேவைகளை வழங்கும் செயல்திட்டத்தினை நிறைவு செய்யும் திகதி 2024 ஏப்ரல் 03 ஆம் திகதி என நீடிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அதன் முன்னேற்றம் 30 சதவீதம் மாத்திரமாக காணப்பட்டது. | 2017-2020 ஆம் ஆண்டுகளில் செயத்திட்டத்தின் ஆரம்ப காலப்பகுதியான போதிலும் 2018 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் பணம் கிடைக்காமல் கோவிட் தொற்றுநோய் நிலைமை, பொருளாதார வீழ்ச்சி, பணம் உரிய முறையில் கிடைக்காமை ஆகிய காரணங்களால் அந்த காலப்பகுதியில் நடைமுறைப்படுத்த முடியாது இருந்தது. | கடன் உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களின் நிதி உச்ச செயற்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 5 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றிருந்த 2 வாகன விபத்துகள் மூலம் ஏற்பட்டிருந்த ரூபா 5,257,895 தொகையான நட்டத்தினை அளவீடு செய்வதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிதி திணைக்களத்தின் அரசு நிதி சுற்றறிக்கை 01/2020 இன் பிரகாரம் ரூபா 3,450,945 தொகையினை பதிவழிப்பதற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், காப்புறுதி நட்டையீட்டு தொகையில் உள்ளடக்கப்படாத எஞ்சிய தொகையை அமைச்சிலிருந்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை. | உரிய பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து நட்டங்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |